LIBRARY
24 AUG 1966
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 4th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock Mr. Speaker (The HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

பரம்பூர் கூட்டுறவு நாணய சங்கம்

* குறுகிய கால கேள்வி எண் 2.—திரு. பி. முருகையன் : கனம் கூட்டுறவு அமைச்சர் 26—2—1966-ல் கேள்வி எண் 124-க்கு அளிக்கப்பட்ட பதிலையொட்டி, தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை பகுதியில் உள்ள பரம்பூர் கூட்டுறவு நாணய சங்கத்தில் நடந்த மோசடி சம்பந்தமான குற்றச்சாட்டுகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டனவா ?

(இ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) Yes.

(*b*) Enquiry under section 65 of the Madras Co-operative Societies Act has been ordered and the enquiry is in progress.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, இந்த நிர்வாகத்தில் கையாடப்பட்ட தொகை எவ்வளவு? இதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார், யார் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : According to the preliminary report, the enquiry officer has enquired into 161 loans amounting to Rs. 60,829, இப்பொழுது வந்திருக்கிற தகவல் பிரகாரம் ரூ. 41,482.

திரு. மு. கருணாநிதி : இந்த மோசடிப் புகாரின் காரணமாக அந்த நிர்வாக சபை கலைக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : நிர்வாக சபை சூபர்செஷன் என்ற முறையில் செய்யப்படவில்லை. சென்ட்ரல் பாங்க் எக்சிகூடிவ் ஆபீசர் ஜெனரல் பாடி மீட்டிங் போட ஏற்பாடு செய்து, அதிலே இருந்த பிரெசிடெண்ட், டைரக்டர்கள் வேண்டாம் என்று சொல்லி சூபர்வைசர்-மானேஜர் போட்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். முருகையன் : சொசைடியில் கையாடல் செய்யப்பட்டது நபர்களே இல்லாமல் ப்ரோநோட் எழுதி வைத்து கையாடல் செய்யப்பட்டதா? அல்லது மெம்பர்களாக இருப்பவர்கள்போல் கையெழுத்து போட்டு மோசடி செய்யப்பட்டதா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : இதிலே மூன்று நான்கு விதமான மோசடிகள் நடந்திருக்கக்கூடும் என்ற தகவல் கிடைத்திருக்கிறது. பணம் குறைவாக இருக்கிற நபர்களின் பேரிலே அதிகமாகப் பணம் கொடுக்கப்படுகிறது, பட்டுவாடா செய்யாமலேயே பட்டுவாடா செய்ததாகக் காட்டியது போன்ற கோளாறுகள்தான் இருக்கின்றன.

திரு. மு. கருணாநிதி : இறந்தவர்களின் பேரிலே கடன் கொடுக்கப்பட்டிருப்பதாகப் புகார் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : இறந்தவர்களின் பேரிலும் பணம் கொடுக்கப்பட்டதாகப் புகார் வந்திருக்கிறது.

திரு. கோ. சி. மணி : இந்த மோசடி சம்பந்தமாக எத்தனை நபர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள்? அவர்கள் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன? அவர்கள் அதிகாரிகளா, மற்றவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : அந்தத் தகவல் என்னிடமில்லை.

புலவர் கா. கோவிந்தன் : கையாடல் எத்தனை ஆண்டுகாலமாக நடந்து வருகிறது? அந்தத் தலைவர் எத்தனை ஆண்டுகாலமாக சொசைடியில் தலைவராக இருக்கிறார்?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : எத்தனை ஆண்டுகள் என்பதல்ல. ஆடிட்டர் ஆடிட் செய்கிறார். குறை இருக்கிறது என்று தகவல் வரும்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. மு. கருணாநிதி : விசாரணையின் முடிவு எப்பொழுது தெரியும் என்று கூற முடியுமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : விசாரணை இருந்துகொண்டிருக்கிறது. சூபர்வைசர்-மானேஜர் மானேஜ் செய்துகொண்டிருக்கிறார். டெபுடி ரிஜிஸ்ட்ரார் பொறுப்பிலே சி.எஸ்.ஆர். ஒருவரைப் போட்டு விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. ரிப்போர்ட்டுகள் வந்துகொண்டிருக்கின்றன. அவர்களுடைய சொத்துகள் எல்லாம் அட்டாச்மென்ட் செய்யப்பட்டு பராதீனம் செய்யாதபடி பார்த்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

4th March 1966]

திரு. து. ப. அழகமுத்து : இம்மாதிரி மோசடி கேஸ்களை ஆரம்பித்து முடிவு பெறுவதற்கு நீண்ட காலதாமதம் ஆகிற காரணத்தினால் குற்றங்களை மறைப்பதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆகையால், இந்தக் கால தாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்காகத்தான் நிலம், இம்மூவபல் ப்ராபர்டீஸ் எல்லாம் அட்டாச்மென்ட் செய்கிறோம். வேறு ஒன்றும் செய்ய முடியாது.

கனம் சபாநாயகர் : ரூல்ஸ்படித்தானே செய்வார்கள்.

திரு. செ. மாதவன் : இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர்கள் பேரிலே இந்தக் கையாடல் குற்றம் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டதா? அப்படியிருந்தால் ஊழல்கள் எத்தனை? அவை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : நவம்பர் 27-ம் தேதியிட்ட பெட்டிஷன் ஒன்று ஹோம் மினிஸ்டருக்கு வந்தது. அதன் பிறகு டிசம்பர் 14-ம் தேதியிட்ட பெட்டிஷன் ஒன்று எனக்கு வந்தது.

திரு. எஸ். முருகையன் : இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது அமைச்சர் அவர்கள் இந்த நிர்வாகம் கலைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது கலைக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள் . .

கனம் சபாநாயகர் : கலைக்கப்படவில்லை என்றுதான் சொன்னார்கள்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இன்றும் நான் சொல்கிறேன் கலைக்கப்படவில்லை என்று. கலைக்கப்படுகிறதென்றால் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் சூப்பர்சீட் செய்தாக வேண்டும். அப்போதுதான் அது கலைக்கப்பட்டதாக அர்த்தம். ஆனால், அவர்கள் ஜெனரல் பாடி மீட்டிங் போட்டு சூபர்வைசர்-மானேஜரைப் போட்டிருக்கிறார்கள்.

திரு. மு. கருணாநிதி : பொதுவாக விசாரணை முடிந்த பிறகு கலைக்கப்படுமா? அல்லது கலைக்கப்பட்ட பிறகு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இரண்டு விதமாகவும் செய்யலாம். என்கொயரி செய்து சூபர்செஷன் செய்வதா இல்லையா என்பது கவனிக்கப்படும். என்கொயரிக்குப் பிறகுதான் சூபர்ஸீட் செய்வதா இல்லையா என்பது பற்றி யோசனை செய்யவேண்டும்.

கனம் சபாநாயகர் : சூபர்ஸீட் பண்ணுவதற்கு போதிய காரணங்கள் வேண்டும்.

[4th March 1966

திரு. மு. கருணாநிதி: இரண்டு விதமாகச் செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முதலிலே கலைக்காததற்கு என்ன காரணங்கள் இடையூறாக இருக்கின்றன என்பதைத் தெரிவிப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அமைச்சர் அவர்கள் கூறியதை கனம் அங்கத்தினர் கேட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். நோட்டீஸ் கொடுப்பதுதான் என்கொயரி. நோட்டீஸ் கூட கொடுக்காமல் கலைக்க முடியாது. இரண்டுவிதம் ஒன்றும் இல்லை. நீண்டகால என்கொயரியாகவும் இருக்கலாம் அல்லது குறுகிய கால என்கொயரியாகவும் இருக்கலாம்.

மதுரையில் நூற்பாலை

* 167 கேள்வி.—திரு. பி. கே. மூக்கையா தேவர்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் மதுரை நகரில் ஏதேனும் நூற்பு ஆலைகள் மூடப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) ஆம்.

(இ) நூல் தேக்கம் காரணமாக எற்பட்ட பண நெருக்கடியினால் மதுரை ராஜா மில் 15—10—1965-ல் மூடப்பட்டது. தொழிலாளர் துணைக் கமிஷனர், மதுரை, அவர்களது சமாச முயற்சியினால் மீண்டும் மில் 25—10—1965-ல் திறக்கப்பட்டு, இயங்கி வருகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: இப்போது வரவர டெர்லினை மக்கள் அதிகமாக அணிந்துகொள்ளுகிற காரணத்தால் மில்கள் எல்லாம் மூடப்படும் என்ற அச்சம் ஏற்படுகிறது. இந்த டெர்லின் அயல்நாட்டிலிருந்து வருகிறதா? அல்லது, நம் நாட்டில் தயாரிக்கப்படுகிறதா? அயல் நாட்டிலிருந்து வந்தால், வராமல் தடை செய்வதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ராஜா மில் மூடப்பட்டதா என்பதுதான் மூலக் கேள்வி. இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஜவுளித் தேக்கமும் நூல் தேக்கமும் நிறைய இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த மில் மூடியிருந்த சமயத்தில் உண்மையாகவே தேக்கம் இருந்ததா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சர்க்காருக்கு இருக்கும் தகவல் மில்களில் நூல் தேக்கம் இருக்கிறது என்பதுதான்.